விலை: சதம் 75

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 1 ஷவ்வா 16 இதழ் 184
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-8 1981

இலங்கை ஓட்டுப்பலகை கூட்டுத்தாபனம், தங்களது விற்பனை முகவர்களாக எம்மை நியமனம் செய்துள்ளது. உங்களுக்குத் தேவையான சிப்போட், பிளைவூட் வகைகளுக்கும் கதவுகளுக்கும்

**ராம்ஸன்ஸ்**
**ஹாட்வெயர் ஸ்டோர்ஸ்**
19, ஸ்டான்லி றோட், யாழ்ப்பாணம்
தொலைபேசி: 508

**டில்கா வாச் வேக்ஸ்**
**Dilka Watch Works**
யாழ் நகரில் சகல மணிக்கூடுகளையும் திருத்தவும் புதிதாக வாங்கவும் விஜயம் செய்யுங்கள்.

**டில்கா வாச் வேக்ஸ்**
பஸ் நிலைய எதிர் மேல் மாடி
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 8174

# "தமிழ் மக்கள்மீது தொடரும் தாக்குதல்கள்!

## உயிர், உடமையைப் பாதுகாக்க உடன் நடவடிக்கை எடுக்கவும்'

### ஜனாதிபதிக்கு 'அமிர்' கோரிக்கை

(கொழும்பு)

"நாட்டின் பல பகுதிகளிலும் பரவலாக வாழும் தமிழ் வர்த்தகர்கள், இனவெறித் தாக்குதலுக்குள்ளாகி, பெருமளவில் உடமைகளை இழந்து துன்புறுத்தலுக்கு இலக்காகி வருகின்றனர். இத்தகைய சூழ்நிலைக்கு; சில அரசாங்க பாராளுமன்ற அங்கத்தவர்களின் பேச்சும்; பொறுப்பு வாய்ந்த சில அமைச்சர்களின் தூண்டுதல் பேச்சுக்களுமே காரணம் என்பதை மனவருத்தத்துடன் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்."

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு எழுதியுள்ள கடிதத்தில் கவலை தெரிவித்துள்ளார்.

அக்கடிதத்தில் திரு. அமிர்தலிங்கம் மேலும் தெரிவித்துள்ளதாவது:

"தமிழ்மக்களை மிரட்டிப் பணியவைக்கலாம் என்று சிலர் எண்ணுகின்றார்கள். ஆனால் தன்மானமுள்ள எந்த மக்களையும் வன்செயல்களினாலோ அல்லது காடைத்தனத்தினாலோ பணிய வைக்க முடியாது என்பதை உங்களின் அனுபவத்தின்மூலம் நீங்களே அறிவீர்கள்.

"ஒரு இனம் தாக்குதலுக்குள்ளாகும்போது, மனிதாபிமானத்தின் மனச்சாட்சி முறையீடு செய்வதைத் தவிர அந்த இனத்துக்கு வேறு என்ன தீர்வு இருக்கிறது?

"தமிழ்மக்கள், அவர்களின் பொறுமைக்கு மிஞ்சிய விதத்தில் கொடுமைப்படுத்தப்படுகின்றனர்.

"சில அரசு எம். பிக்களினதும் பொறுப்பு வாய்ந்த சில அமைச்சர்களினதும் பேச்சுக்கள் தமிழ் மக்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டிவிடுவதாகவே அமைந்துள்ளது.

"தமிழ்மக்களின் நீண்டகாலப் பிரச்னைக்கு உடனடியாகத் தீர்வு காணுங்கள்" [ம]

# தெஹிவளையில் கடைகள் எரிக்கப்பட்டன

[கொழும்பு]

கொழும்பு நகரில் முப்படையினரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்ட அதேநேரத்தில்; குறிப்பிட்ட சில இடங்களில் அசம்பாவிதசம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. ஆனாலும் சேதம் அதிகம் இல்லையென்று அறிவிக்கப்படுகிறது.

தெஹிவளையில் நேற்று இரண்டு கடைகள் எரிக்கப்பட்டன. [ம]

## ராஜினுமாச் செய்தி: உண்மை இல்லை

[கொழும்பு]

கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் திரு சௌ. தொண்டமான் தமது அமைச்சர் பதவியை ராஜினுமா செய்துவிட்டதாக வெளிவந்த செய்தியில் உண்மை எதுவும் இல்லை என்று அரச வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன.

அமைச்சர் திரு. சௌ. தொண்டமான் தமது அமைச்சர் பதவியை ராஜினுமா செய்துவிட்டதாக சென்னையிலிருந்து வெளிவரும் சில பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருந்தன. [ம]

### கம்பளையில் கடை எரிப்பு:

# இராணுவம் சுட்டதில் ஒருவர் பலி

[கம்பளை]

மலையகத்தின் குறிப்பிடப்பட்ட சில பகுதிகளில் நேற்றும் வன்செயல்கள் இடம் பெற்றன.

கம்பளையில் சில கடைகள் சேதப்படுத்தப்பட்டன. இவற்

[6-ம் பக்கம் பார்க்க]

# மாணவர்களுக்கு மீண்டும் க. பொ. த. சான்றிதழ்

### 12 வருட இடைவெளியின் பின் நடவடிக்கை

[கொழும்பு]

புதிய க. பொ. த. [சாதாரணம்-உயர்தரம்] பரீட்சைகளில் சித்தியடைந்தோருக்கு சாதாரணமான சான்றிதழ்களை வழங்குவ

[6-ம் பக்கம் பார்க்க]

உ

## திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணி மாதம் 4-ந் திகதி (20-8-81) வியாழக்கிழமை காலை 8-00 மணிக்கும் 9-30 மணிக்குமிடையில் வரும் சுபவேளையில்,

எங்கள் மகன் திருநிறை செல்வன் **கலாநிதி செந்தில்செல்வனுக்கும்**

எங்கள் திருநிறைசெல்வி **லோகேஸ்வரிக்கும்**

திருவருளை முன்னிட்டு கீரிமலைச் சிவன்கோவிலில் திருமணம் நடைபெறும். அத்தருணம் தாங்கள் சுற்றஞ் சூழ வருகை தந்து மணமக்களை வாழ்த்துமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

**வரவேற்பு:**
மணமகன் இல்லத்தில 20-8-81
மாலை 5 மணி தொடக்கம் 8 மணி வரை
மணமகள் இல்லத்தில் 21-8-81
மாலை 5 மணி தொடக்கம் 8 மணி வரை

இங்ஙனம்

**ச. அம்பிகைபாகனும் பாரியாரும்**
'மணி மனை',
மல்லாகம்.

**வ. சச்சிதானந்தனும் பாரியாரும்**
பன்றலை,
தெல்லிப்பழை.

(0631)

உங்கள் முதலீட்டிற்கு 27% வரை வட்டி வழங்குகின்றோம்

அத்துடன் உங்களுக்கு

★ ஆயுள் காப்புறுதி இனும் ★ வீட்டுப்பாவனைப் பொருட்கள் [பணம் கொடுப்பனவு தவணை அடிப்படையில்]

நாம் உங்களுக்கு 41 வருடங்களாகச் சேவை செய்துவருகின்றோம் என்பதைப் பெருமையுடன் கூறிக்கொள்கின்றோம்.

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ ஸ்திரத்தன்மை

வடமாகாணத்திலேயே ஆகக்கூடிய முதலீட்டாளர்களைக் கொண்ட ஒரே ஒரு தனியார்துறை நிதிநிறுவனம்

**த பினன்ஸ் கம்பனி லிமிட்டெட்,**

TFC

191, 249 சி, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம், போன்: 7680

### மணிவாக்கு

நம்மிடம் வரும் விருந்தாளிகளுள் அச்சம் என்னும் விருந்தாளியே அதிகமான செலவுக்கு இடம்பண்ணி வைத்துவிடுகிறுன். —அருள் விருந்து.

# நமது நோக்கு

## கற்ற கயவர்

கண்டி மாநகரில் ஈசால பெரஹரா என்ற நாட்டின் மாபெரும் தேசிய விழாவைக் கண்டுகளித்த பல்லாயிரக்கணக்கான மக்கள் தாம் எவ்வித துயரச் சூழ்நிலையில் இந்த இன்பத்தை அநுபவிக்க நேரிட்டதென்பதை உணரமுடியாத மானிடர்கள் அல்ல.

நாட்டின் பலபாகங்களிலும் அப்பாவிமக்கள் மட்டுமல்ல, சமூகத்தில் உயர் மட்டத்தில் வாழ்ந்துவரும் மக்களும் கொலை, தீவைத்தல், கொள்ளையடித்தல், வர்த்தக நிலையங்களை அழித்தல், மக்கள் போக்குவரத்தில் தாக்கப்படுதல் போன்றவற்றினுல் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர் ஆயினும் முப்படை அவசர சேவையில் ஈடுபட்ட பின்னும், இத்தீங்குகள் தொடர்வதானுல் இந்த நாட்டில் அமைதியாக வாழ்வது அபூர்வமாகும். இது ஒரு திட்டமிட்ட செயல்

இதனைக் குறிப்பிடும்போது எமது கவலை இரட்டிப்பாகின்றது. ஒன்று: ஜனுதிபதி ஜெயவர்த்தன கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி பரிசுதினத்தில் குறிப்பிட்டது— இந்த அழகான அமைதிவாழ்வை விரும்பும் மக்கள் வாழும் நாட்டில் இத்தகைய கொடூர சம்பவங்கள் தொடர்கின்றனவே என்று அவர் தெரிவித்த கவலை. இரண்டு: [illegible] —'சட்டவிரோதமான' என்பது மிக மென்மைத்தசொல் — சம்பவங்கள் பெரும்பாலும் நாட்டின் பலஇடங்களில் வாழும் தமிழ்மக்களை அடக்கிஒடுக்க எத்தனிக்கும் நடவக்கையென்றகவலை.

நாம் இவ்வாறு தெளிவாகக் கூறுவது பௌத்த போதனையில் பெரும் நம்பிக்கைகொண்ட ஜனுதிபதி அவர்களின் கவனத்துக்கு இது வந்தால் நிச்சயம் அவர் இதற்கு முற்றுப் புள்ளி வைக்கமுயல்வார் என்றகாரணத்தால்.

நெருக்கடி ஒன்றில் நேரும் நெஞ்சழுத்தத்தை நீக்க வல்லது நகைப்பு. இதற்கு உதாரணமாக மனமுடைபுண்ட தமிழ் அமைச்சர் ஒருவர் கூறியது சிந்தனைக்குரியது. இக்கலவரத்தை ஒருபோதும் ஒருவராலும் தடுக்கமுடியாது; கடவுளால் தான் முடியும்!

விரக்திமேலீட்டால் மொழிந்த இக்கருத்து குழந்தை உள்ளத்தில் எழுந்த உண்மைபோல் மிளிர்கின்றது. கடவுள் நம்பிக்கையில்லாத மக்கள் இதை பரிகாசஞ்செய்யவும் கூடும். ஆயினும் ஆழப் பார்த்தால்தின் அர்த்தம் புரியும்.

சிந்தை வித்துக்கு ஒப்பானது; சொல் செடிக்கு ஒப்பானது; செயல் மலர்க்கு ஒப்பானது. சிந்தையில் அகங்காரம் குடிகொண்டால், மலர்வது அழிவு என்பதை நாம் பன்முறை கண்ட அனுபவம்.

'ஈட்டன்' [Eton] விளையாட்டு மைதானத்திலே தான் வாட்டலூ (waterloo) என்ற போர் ஆங்கில மக்களுக்கு வெற்றியளித்த தென்ற தப்பபிப்பிராயம் சில நூற்றுண்டுகளாக நம்பப்பட்டு வந்தது. மாணவ விளையாட்டுவீரர்களே வருங் காலத்தின் படைவீரர்கள்; நாட்டைக்காக்கவும் வேற்று நாடுகளைக் கைப்பற்றவும் வல்லவர்கள் என்ற கருத்துடைய வசனம் அது.

இந்த மூடநம்பிக்கையை பிட்டெறிந்து உலகுக்கு உண்மையை உணர்த்திய ஆங்கில மாமேதை ரசல் பிரபு அதனை வெட்டிப் பாடினர். ''ஈட்டன் விளையாட்டுமைதானப் பயிற்சி பிரிட்டிஷ் சாம்ராச்சியத்தை கட்டிஎழுப்பியது. உண்மை, ஆனுல் அந்த சாம்ராச்சியம் அழிந்ததும் அந்த 'ஈட்டன் மைதானப் பயிற்சியாலே என்றறி'' என்றுர் ரசல்.

கண்டி கிங்ஸ்வூட் கல்லூரி போன்ற இந்நாட்டின் பல பிரபல கல்லூரிகள் இந்தப்பழைய ஆங்கிலக்குறிக்கோளுக்கமைய காலனி ஆட்சிகளில் உருவானவை. ரசல் பிரபுவின புதிய கருத்தை இன்றும் ஏற்றுக் கொள்ளும் சிந்தனை மாற்றம் உடையவையல்ல. ஜனுதிபதி அவர்களும் பிரதமர் அவர்களும் இக்கல்லூரிகளால் உருவாக்கப்பட்ட பெரியோர்கள்!.

ஆனுல் ஒருபெரும் வேறுபாடு; நாட்டைப் பரிபாலிக்கும் இவ்விரு தலைவர்கள் பௌத்த மதத்தின் சீலத்தில் பெரிதும் ஊறியிருப்பவர்கள். எனவே இன்று இங்கு, பல தடவைகளாக நடந்து வரும் இனக்கலவரங்களையிட்டு மனம் நொந்து பேரச்சம் கொண்டிருக்கின்றனர். நாம் ஒரு தேசம் என்ற பெயரைப் பேண முடியவில்லையே.

இங்கு நடைபெறும் அழிவுகளெல்லாம் பிரிவினைகோரும் தமிழர் விடுதலைக் கூட்டணிதான் காரணம் என்றுல், அக்கட்சி அரசுடன் மாவட்ட அபிவிருத்திச் சபையில் ஒத்துழைக்க முன்வரவில்லையா?

இந்த தெளிவான ஆக்கபூர்வ நடவடிக்கைக்கு அளித்த பரிசு, யாழ்ப்பாண தகனம்! இது இராஜ துரோகத்தின் உச்ச நிலையென்று அரசு உணர்ந்திருந்தால், கல்வி, கேள்வி அனுபவமூற்ற அரசியல் வாதிகள், அமைச்சர்கள், அரசின் உயர்மட்ட அதிகாரிகள் நிகழ்த்திய பேச்சுகள், இவ்வித கலவரங்கள் தொடரத் தூண்டுதல் அளித்திருக்கமாட்டாவா?

பயங்கரவாதம், எங்கும்— வடக்கிலும் தெற்கிலும்— பாரபட்சமின்றி இருந்த இடம் தெரியாது துடைக்கப்பட வேண்டும்!

ஆனுல் வடபகுதிப் பயங்கரவாதப் பெயரில் இனக்கலவரத்தை மீண்டும் தூண்டிவிட உதவும் சிந்தை, சொல், செயல், படித்தவர்களின் அகங்கார மேலீட்டால் பெற்றெடுக்கும் இயமன்கள் என்றறிக.

பகைவரை அடக்குவது அரசின் கடமை; நிராயுத பாணிகளை ஆயுதந்தாங்கிய பகைவர் தாக்க முடியுமானுல் அது அரசின் இடங்கேடு என்ற பழிசுமத்தப்படும் கற்றகயவரின் அடக்குமுறைத்திட்டங்களுக்குச் செவிசாயாமல் நாட்டைக் காக்கும் பணியில் அரசு துரிதப்பட வேண்டும்.

இந்தப்பணியில் அரசு தவறுமானுல், நலிவுறும் மக்களுக்கு ஒரே ஒரு உண்மை பாதுகாப்பு அளிக்குமென்பது திண்மை.

''எளியாரை வலியார் மெலிததால்
வலியாரைத் தெய்வம் தண்டிக்கும்,''

# மட்டக்களப்பில் முகாமிட்ட அகதிகள் அம்பாறை திரும்புகின்றனர்

(நமது நிருபர் தமிழினியன்)

அம்பாறையில் அண்மையில் இடம்பெற்ற வன்முறைச் சம்பவங்களை அடுத்து மட்டக்களப்புக்கு அகதிகளாக வந்த தமிழ் மக்கள் அம்பாறைக்குத் திரும்புகின்றனர்.

அகதிகளாக மட்டக்களப்பு வந்த அம்பாறை அரசாங்க ஊழியர்கள் இன்று திங்கட்கிழமை தமது அலுவலங்களுக்குச் செல்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அம்பாறை மட்டக்களப்பு மாவட்டங்களில் இப்போது அமைதி நிலவுகிறது.

### வேல்முருகு வாக்குமூலம்

அம்பாறை அசம்பாவித சம்பவங்களை அடுத்து பொலிசாரினுல் கைது செய்யப்பட்டு வீட்டுக்காவலில் வைக்கப்பட்டுள்ள அம்பாறை மாவட்ட அபிவிருத்திசபைத் தலைவர் திரு. க. வேல்முருகு ஆஸ்பத்திரியில் வைத்து பொலிஸாருக்கு வாக்கு மூலம் அளித்தார்.

சுகமடைந்துவரும் திரு. வேல்முருகு சுமார் ஒன்றரை மணித்தியாலம் வரை வாக்கு மூலம் அளித்தார்.

தமிழ்தெரிந்த பொலிஸ் அதிகாரியிடம் தாம் வாக்கு மூலம் அளிக்க விரும்புவதாக அவர் தெரிவித்ததை அடுத்து பொலிஸ் அதிகாரி திரு. எஸ். ரவீந்திராஜா ஆஸ்பத்திரிக்குச் சென்று அவரது வாக்குமூலத்தைப் பதிவு செய்தார்.

# ''சான்ட்விச்' உணவைவிட போதை மாத்திரைகள் விலைகுறைவு''

## இலங்கைபற்றி ஆஸி. உல்லாசப்பயணி

[கொழும்பு]

'சான்ட்விச்' உணவைவிட இலங்கையில் போதைவஸ்து மாத்திரைகள் மலிவாகக் கிடைக்கின்ன' என்று அவுஸ்திரேலிய உல்லாசப் பயணி ஒருவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

திரு. எவ். பிலாச் என்ற மேற்படி உல்லாசப் பிரயாணி இலங்கையில் ஹோட்டல்கள் அரசாங்கத்திற்குச் சாதகமாக லாபநோக்கத்தை மட்டுமே கருத்திற் கொண்டு செயற்படுவதாகவும், ஒரு சாதாரண 'சான்ட்விச்' பண்டத்திற்கே 50 ரூபா அறவிடுவதாகவும் குற்றஞ்சாட்டினுர்.

இலங்கையில் போதைவஸ்து பயன்பாடுபற்றிக் குறிப்பிட்ட மேற்படி பயணி, கொழும்பு, பெந்தோட்ட, ஹிக்கடுவ, திருகோணமலை ஆகியபிரதேசங்களில் இவைகிடைக்கின்றன என்றும் 'சான்ட்விச் பண்டத்தைவிட மிகவும் மலிவாக இருப்பதாகவும் தெரிவித்தார்.

இலங்கையில் உல்லாசப் பயணத்துறை கூடிய கட்டணம் அறவிடுவதன் மூலம் இந்த அழகிய தீவினைக் களங்கப்படுத்துவதாகவும் இவ்வாறு அறவிடாது சிலகட்டுப்பாடுகளை விதித்து இத்துறையினை மேம்படுத்த வேண்டும் என்றும் திரு. எவ். பிலாச் யோசனை தெரிவித்துள்ளார்.

# மன்னுருக்கு 24 மணிநேர மின்சாரம் வேண்டும்

## மா. அ. சபைக்கு பிரேரணை

[மன்னுர்]

மன்னுர் மாவட்ட அபிவிருத்திச்சபையின் இரண்டாவது கூட்டம் இம்மாதம் 18 ம் திகதி காலை 9 மணிக்கு மன்னுர் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு. பி. எம். செபமாலை தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மன்னுர் மாவட்டத்தின் அபிவிருத்தி தொடர்பான சில பிரேரணைகளையும். மன்னுர் மாவட்ட அபிவிருத்திக்கு வேண்டிய நிதிகளை எவ்வாறு பெறுவது என்பது தொடர்பான சில பிரேரணைகளையும் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் சமர்ப்பிப்பார்.

மன்னுர்ப் பகுதிக்கு 24மணி நேரம் மின்சாரம் கிடைக்க வழிசெய்யும் பிரேரணை ஒன்றை மன்னுர் எம் பி திரு சூசைதாசன் சமர்ப்பிப்பார். மற்றும் உறுப்பினர்கள் திரு வி கைலாசபிள்ளை, திரு கயஸ் பெல்டானே, ஜனுப் எஸ் கே சாஹுல் ஹமீது ஆகியோரும் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பர்.

### வெளிநாட்டில் வேலை தருவதாக

# பண மோசடி செய்தாராம்! தீர்ப்பு ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கொட்டடியைச் சேர்ந்த பி எம். ஜோன் என்பவர், வெளிநாட்டில் வேலைபெற்றுத் தருவதாக 11 பேரிடம் பணம் மோசடி செய்ததாக யாழ். நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு தீர்ப்பு வழங்குவதற்காக அக்டோபர் 1ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

யாழ். நீதிபதி திரு.ரி. ஜோகநாதன முன்னிலையில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கை யாழ். விசேஷ புலனுய்வுத்துறை பொறுப்பதிகாரி ஜி. எஸ். விள்ளை, கான்ஸ்டபிள் எஸ். தர்மலிங்கம் உதவியுடன் நடாத்தினுர். [மா-இ]

### பருத்தித்துறையில் வங்கிக்கிளை

[புலோலி]

பருத்தித்துறையில் மக்கள் வங்கிக்கிளை யொன்று அடுத்த மாதம் 2-ம் திகதி திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பஸ் நிலையத்திற்கு முன்பாகவுள்ள கட்டிடத்தில் இவ்வங்கிக்கிளை திறந்து வைக்கப்படவுள்ளது.

[மன்னுர்]

மன்னுரில் மேசன், தச்சவேலைகளுக்கான தொழிலாளர்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இத்தட்டுப்பாடடை நீக்கும் பொருட்டு மன்னுர் மாவட்டத்தில் சனியாவ தொழில் பயிற்சி நிலையப் ஒன்றை நிறுவவும்.

இவ்வாறு மன்னுள் கடற்தொழில் அதிகாரி ஜனுப் என், எஸ். எம். கௌத் அரசைக் கோரியுள்ளார்.

### செய்தித் துணுக்கு

**எதிரிகள் விடுதலை**

புலோலி கிராம வங்கிக் கொள்ளை வழக்கில் மூன்று எதிரிகள், விசாரணை இடைநடுவில் நேற்று முனதினம் விடுசெய்யப்பட்டனர்.

**யாழ். ப. நோ. கூ. சங்க வழக்கு**

[கொழும்பு]

யாழ்ப்பாண பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் திரு. எம். ஆலாலசுந்தரம் உட்பட ஏழு இயக்குநாகளின் தெரிவை ஆட்சேபித்து தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபனை மனுமீதான விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது விசாரணை செப்டம்பர் மாதம் 10 ம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது.

**கொழும்பு நூல் நிலையம்**

[கொழும்பு]

கொழும்பு பொது நூல்நிலையத்திற்குப் பாதுகாப்பு அளிக்கப்படடுள்ளது. நூலகத்தின் இருபக்க நுழைவாயில்களிலும் ஆயுதம் தரித்த பொலிஸாரும இராணுவத்தினரும் காவல் புரிந்துவருகின்றனர். ஜனுதிபதியின் பணிப்பின்பேரிலேயே புதிய புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**கொல்வின் புகார்**

[கொழும்பு]

தொலைபேசி மூலம் பயமுறுத்தப்பட்டதாக கலாநிதி கொல்வின் ஆர். டி சில்வா டகார் பிது பிரதிப் பொலிஸ் மா அதிபர் திரு ஆர். சுந்தரலிங்கம் விசாரணைசெய்துவருகின்றுர்.

**நீர்வேலி கொலை, கொள்ளை**

[கொழும்பு]

நீர்வேலி கொலை, கொள்ளை தொடர்பாகச் சந்தேகத்தின் மீது கைதான நான்கு மடபதி வாலிபர்களின் ஆட்கொணர்வு மனுக்கள் மீது தீர்ப்பு வழங்குவதை மேன்முறையீட்டு நீதிமன்றம் செப்டம்பர் 23ந் திகதி வரை ஒத்திவைத்துள்ளது.

**பயங்கரச்சம்பவம்**


[கொழும்பு]

எம்பிலிப்பிட்டியாவில் பஸ் ஒன்று வழிமறிக்கப்பட்டு பிரயாணஞ்செய்த தமிழர்கள், காடையர் கோஷ்டியினரால் இறக்கித் தாக்கப்படுகின்றனர். மூவர் மீது பெற்றோல் ஊற்றித் தீ வைத்துள்ளனர். இவர்களில் ஒருவர் மரணமானுர். இருவர் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

**தெமட்டக்கொடையில்**

[கொழும்பு]

தெமட்டக்கொடையில் கென்ட் வீதியிலுள்ள கடை ஒன்று முகமூடியணிந்த கொள்ளையர்களால் கொள்ளையடிக்கப்பட்டதோடு, கடை உரிமையாளரான சிவபாதம் என்பவரும் அவரது மனைவியும கத்திக்குத்துக்கு இலக்காணுர்கள்.



## இன்று நல்லூர்க் கந்தன் 13-ம் திருவிழா

வானே புனல்பார் கனல் மாருதமோ
ஞானேதயமோ நவினு மறையோ
யானே மனமோ எனையாண்ட இடந்
தானே பொருளாவது சண்முகனே

கந்தரநுபூதி.

# "ஈழத் தமிழர் துயர் கண்டு தமிழக மக்கள் பெருங் கவலை கொண்டுள்ளனர்!"

## சுதந்திரதின வைபவத்தில் எம். ஜி. ஆர்.

சென்னை, ஆக. 16

இலங்கையில் தமிழ் மக்கள் அல்லல்படுத்தப்பட்டு வருவதைத் தடுக்கும் பொருட்டு இந்திய மத்திய அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று தாம் நம்புவதாக தமிழக முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கருத்துவெளியிட்டுள்ளார்.

சென்னையில் நடைபெற்ற இந்திய சுதந்திர வைபவம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே திரு இராமச்சந்திரன் மேற்கண்டவாறு கூறினார்.

இலங்கையில் இடம்பெற்று வரும் இனக்கலவரங்கள் மூலம் தமிழ்மக்கள் அல்லல்படுத்தப்படுவது வரவேற்கத்தக்கதல்ல என்றும் இலங்கைத் தமிழ் மக்களின் துயர்கண்டு தமிழக மக்களும், அரசும் பெரும் கவலையடைகிறது என்றும் திரு. இராமச்சந்திரன் கூறினார்.

# பெண் பத்திரிகையாளர் சுட்டுக் கொலை!

நைரோபி. ஆக. 16

அமெரிக்க பெண் பத்திரிகையாளர் ஒருவர் நைரோபியில் கொள்ளையரால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்!

எமிலி டிநிகோல் என்ற மேற்படி பத்திரிகையாளர் அமெரிக்காவின் சர்வதேச தொடர்பு ஸ்தாபனத்தின் ஓர் அங்கத்தவராவார்.

வொய்ஸ் ஒப் அமெரிக்கா வானொலி நிலையத்துக்கு காரில் சென்று கொண்டிருக்கையில் திடீரென ஆயுததாரிகள் வழிமறித்து இறங்கும்படி பணித்ததாகவும் இவ்வாறு செய்ய எமிலி டிநிகோல் மறுக்கவே கொள்ளையர் சுட்டுக்கொலை செய்ததாகவும் அறிவிக்கப்படுகிறது.

# ஆட்சி முறைகேடுகளை மூடிமறைக்க தமிழக முதல்வர் முயல்கிறாராம்!

## கருணாநிதி குற்றச்சாட்டு

சென்னை, ஆக. 16

".தமிழக முதல்வர் திரு எம். ஜி. இராமச்சந்திரனின் ஆட்சியில் காணப்படும் முறைகேடுகளை மூடிமறைத்து தமிழக மக்களைத் திசைதிருப்பும் நோக்கத்துடனேயே தமிழகத்தின் தலைநகரை சென்னையிலிருந்து மதுரைக்கு மாற்றும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன."

இவ்வாறு தி.மு.க தலைவர் திரு. மு. கருணாநிதி திருச்சியில் நிருபர்களிடம் கருத்து வெளியிட்டுள்ளார்.

ஹரிஜனர்கள் முஸ்லிம்களாக மாறுவதற்குக் காரணம் அ. தி. மு. க அரசின் கொள்கையே என்றும் ஹரிஜனர்களின் பிரச்சினைகளைத் தீர்க்க அ. தி. மு. க அரசு உரிய நடவடிக்கை எடுக்கவில்லை என்றும் திரு. கருணாநிதி கூறினார். (ச)

## கைதடிதெற்கு

### சனசமூக நிலைய ஆண்டு விழா

(கைதடி)

கைதடிதெற்கு சனசமூக நிலையத்தின் 26வது ஆண்டு விழா நிகழ்ச்சிகள் புதன்கிழமை ஆரம்பமாகின்றன. இதனையொட்டி வடமராட்சி ரீதியில் மின்னொளியில் கரப்பந்தாட்டச் சுற்றுப்போட்டியும், தென்மராட்சி ரீதியில் விநோத உடைப்போட்டியும், தாச்சிப்போட்டியும் நடைபெறவுள்ளன. விழாவின் இறுதி நிகழ்ச்சிகள் இம்மாதம் 29, 30, 31-ம் திகதிகளில் நடைபெறும்.

# "தமிழினத்துக்கு தெய்வம்தான் துணை"

(உடுப்பிட்டி)

"எமது நாட்டைப் பொறுத்தவரையில் சமுதாயத்தில் அல்லல்படுகின்ற நிலை இன்றுதான் இல்லை. நாட்டில் பல தீய சக்திகள் அமைதியையும் இன ஒற்றுமையையும் குலைத்து வருகின்றன. நாட்டில் வாழும் மக்களிடையே பரஸ்பரம் அன்பு, நல்லெண்ணம், மதிக்கும் தன்மை ஆகியன இருந்தால் அமைதியையும் சமாதானத்தையும் நிலைநாட்ட முடியும்."

இவ்வாறு உடுப்பிட்டி எம். பி திரு. க. இராஜலிங்கம் வதிரி தமிழ்மன்ற பாலர்பாடசாலையின் இரண்டாம் வருட இல்ல விளையாட்டுப் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்:

இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவன ஆதரவில் நடைபெற்ற இவ் இல்ல விளையாட்டுப்போட்டிக்கு மன்றத் தலைவர் திரு. சி. க. லோகநாதன் தலைமை வகித்தார். உடுப்பிட்டி எம். பி மேலும் பேசுகையில் கூறியதாவது:

1956ம் ஆண்டுக்குப் பின்னர் இந்த நாட்டில் இனவேறுபாட்டுப் பகைமை ஏற்பட்டு வருகின்றது. அன்பாகவும் ஐக்கியமாகவும் வாழப் பழகிக்கொள்ளாததால் சமூகங்கள் இனங்களுக்கிடையே ஒற்றுமை குலைந்து விரும்பத்தகாத பல அசம்பாவித சம்பவங்கள் நிகழ்ந்துவருகின்றன. இவை மனிதாபிமானமுள்ள எவராலும் சகிக்கமுடியாதவை.

நாட்டின் முன்னேற்றம் அந்த நாட்டின் உள்ள கிராமங்களின் வளர்ச்சியிலேயே தங்கியுள்ளது. எனவே எந்த அளவில் கிராமிய புனரமைப்பு மீளமைவு துரிதமாக நடைபெறுகின்றதோ அந்தளவில் தான் கிராமிய முன்னேற்றமும் தங்கியிருக்கிறது என்றார்.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை உறுப்பினர் திரு எம். தம்பிமுத்து பேசுகையில், நாம் இன்றைய சூழ்நிலையில் இந்நாட்டில் தவர்களாகவோ ஒடுக்கப்பட்டவர்களாகவோ வாழ்ந்து வருகின்றோம். பல தமிழ் இனத்தின் பாதுகாப்பும் அபிவிருத்தியுமே இன்றியமையாதன. எனவே நாமே பாதுகாத்துக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கின்றோம். தமிழ் இனத்திற்கு இப்போது தெய்வம் தான் துணை என்றார்.

விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினர்களாக இலங்கை கிராமிய மீளமைப்பு நிறுவனத் தலைவர் திரு. பொ. கு. பொன்னம்பலம், திருமதி பொன்னம்பலம் ஆகியோர் கலந்துகொண்டனர். கோவிந்தசாமி இல்லம் 103 புள்ளிகளைப் பெற்று முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

# தியகோ கார்ஸியா: 30 கோடி டாலர் திட்டம்

நியுயோர்க், செப். 15

தியகோ கார்ஸியா விஸ்தரிப்புக்கு அமெரிக்கா முப்பது கோடி டாலர் ஒதுக்கியுள்ளது. அடுத்த ஐந்தாண்டில் முந்நூறு கோடி டாலராக இத்தொகை அதிகரிக்கப்படும்.

இது சம்பந்தமாக அசோஷியேட் பிரெஸ் செய்தி நிறுவனம் வெளியிட்டுள்ள சிறப்புச்செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது:

"ரேமண்ட் பிரவுன் அன்ட் றூட், மல்லம் என்ற இரண்டு கம்பனிகளுடன் அமெரிக்க கடற்படை, தியாகோ கார்ஸியா கடற்படை, விமானப் படைத் தளத்தை விஸ்தரிப்பதற்கான ஒப்பந்தமொன்றைச் செய்துள்ளது. இதில் மாரிஷியஸ் தொழிலாளர்கள் வேலைக்கமர்த்தப்படவுள்ளனர்.

"தியாகோ கார்ஸியா, மாரிஷியஸுக்கு சொந்தமானது. இதை பிரிட்டனிடமிருந்து அமெரிக்கா பெற்றது. இதை மாரிஷியஸுக்கு திருப்பிக் கொடுக்கவேண்டுமென்று மாரிஷியஸ் அரசு கோரியுள்ளது.

"புதிய திட்டத்தின்படி தியாகோ கார்ஸியாவில் விமானங்கள் ஊர்ந்து பறக்க ஒரு தளம், விமானக் கொட்டகை, டிப்போ, ராணுவத்தினரின் குடியிருப்பு முதலியன நிறுவப்படும் அணுகுண்டு பொருத்தப்பட்ட பாரிய பி-5, பி-52 விமானங்கள் இறங்குவதற்கான வசதிகளும் நிர்மாணிக்கப்படும். பி-52 விமானங்கள் இந்து மகா சமுத்திரத்தில் நோக்குவிடப்பட்டுள்ளன. அமெரிக்க கடற்படையின் நிர்மாணத்திட்டம் தீவில் ராட்சத தளமொன்றை நிர்மாணிப்பதற்கான பிரமாண்டமான திட்டத்தின் ஒரு அம்சமாகவே உள்ளது. இத்திட்டத்தை அமுல்படுத்த அடுத்த சில ஆண்டுகளில் 330 கோடி டாலர் ஒதுக்கப்படவுள்ளது.

அவுஸ்திரேலியா முதல் பாரசீக வளைகுடா கிழக்கு ஆபிரிக்கா கரைவரையான பரந்த பிராந்தியத்தில் அமெரிக்கா ஸ்தாபிக்கப்போகும் தளங்களில் முக்கியமான தளம் தியகோ கார்ஸியா இருக்கும் என்று கூறப்படுகிறது.

படைகளைத்திரட்டி வைத்து வெளியே அனுப்புமிடமாகவும் தியாகோ கார்ஸியா செயல்படும். இதில் 1,800 கடற்படைவீரர்களுக்கான ஆயுதம், வெடிமருந்து மற்றும் அதிரடிப் படைகள் செல்லும் திசையெல்லாம் நகரும் ஏழு கப்பல்கள் ஏற்கனவே இயங்கி வருகின்றன. 1980 ஏப்ரலில், ஈரான் மீது இயங்கிய அமெரிக்கப் படைப்பிரிவு தியகோ கார்ஸியாவிலிருந்தே புறப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

# கிராமாபிவிருத்தி சபை

(பண்டத்தரிப்பு)

கட்டுடை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் நடைபெற்ற போது பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டுள்ளனர். தலைவர்: ச சிவகுமாரன், உபதலைவர்: ஆ. கந்தசாமி, உபசெயலாளர்: இ. மகாலிங்கம் பொருளாளர்: நா. ஆறுமுகம். செயற்குழு உறுப்பினர்களாக ஒன்பது பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

# மாலை மரியாதையை 'நவம்' ஏன் ஏற்பதில்லை?

(பச்சிலைப்பள்ளி)

"இஸ்ரேல் நாட்டு ஆரம்பப் பாடசாலைகளில் சிறுவர்களுக்கும் போதிக்கப்படும் தியாகம், வீரம், ஒழுங்கு, கட்டுப்பாடு, கண்ணியம் என்பனதான்; யூத இனத்தை பல துறைகளிலும் வெற்றியடையச் செய்துள்ளன."

வரணி வடக்கு சைவப் பிரகாச வித்தியாலயத்தின் பொன்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சாவகச்சேரி எம். பி. திரு வி. என். நவரத்தினம் உரையாற்றுகையில் கூறினார். இவ்வைபவத்திற்கு வித்தியாலய அதிபர் திரு சி பொன்னையா தலைமை வகித்தார். கௌரவ விருந்தினராக யாழ் பிரதம கல்வி அதிகாரி திரு. வே. சபாநாயகமும் சிறப்பு விருந்தினர்களாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். துரைராசா சாவகச்சேரி வட்டாரக் கல்வி அதிகாரி திரு. பொ. தியாகராசா, சாவகச்சேரி மாவட்ட அபிவிருத்திச் சபை வேட்பாளர் திரு. நவரத்தினம் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சாவகச்சேரி எம். பி. தொடர்ந்துபேசுகையில் கூறியதாவது:

"நான் வாழ்க்கையில் பட்டதாரியாக, சட்டத்தரணியாக, பாராளுமன்ற உறுப்பினராக வாழ்ந்துவிட்டேன். இதற்கான பாடங்களையும், பயிற்சியையும் எனது ஆரம்பப் பாடசாலையான நுணாவில் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலேயே பெற்றேன். கொடிகாமத்தில் சாதி, சமூகக் குறைபாடுகளுக்காகப் போராடி மரணமான ஐயா (வேலு) என்பவரின் பூதவுடலின் மீது எடுத்துக் கொண்ட சபதத்திற்காக கடந்த பதினொரு வருடங்களாக மாலை மரியாதைகளை நான் ஏற்றுக்கொள்வதில்லை. அத் தியாகியின் இலட்சியம் நிறைவேறும்வரை மாலை மரியாதைகளை நான் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை" என்று கூறினார்.

இவ்வைபவத்தில் சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் எஸ். துரைராசா வட்டாரக் கல்வி அதிகாரி திரு பொ. தியாகராசா உட்பட மற்றும் பலர் உரையாற்றினர்கள். விழாவில் இறுதியில் மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

# வட்டுத் 'திரு' விடம் கோரிக்கை

(பச்சிலைப்பள்ளி)

காரைநகர், நீலங்காட்டிலுள்ள 'தாழ்த்தப்பட்ட மக்களின் நன்மைகருதி அங்கு பொதுக் கிணறொன்று அமைக்கும் வகையில் 1982-ம் ஆண்டு நிதி ஒதுக்கிடுசெய்யுமாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசை அறவழிப் போராட்டக்குழு கேட்டுள்ளது.

# மகா கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ம் கோணப்புலம் ஞானவைரவர் கோவில் மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகி நாளை மறுதினம் 20-ந் திகதி காலை நடைபெறவுள்ளது. (மா)

# சமய அறிவுப் போட்டி

(சென்னை)

வேலணை பெருங்குளம் முத்துமாரியம்மன் கோவில் வருடாந்த உற்சவத்தையொட்டி வேலணை இந்து வாலிபர் சங்கமும், இந்து இளைஞர் மன்றமும் இணைந்து நடத்தும் சமய அறிவுப் போட்டி இவ்வருடமும் நடைபெறும்.

# வதிரி கிராமத்துக்காக ஆய்வுக் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

வதிரிக் கிராமத்தின் முன்னேற்றம் கருதி சமூக-பொருளாதார ஆய்வு ஒன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது.

இதற்கான திட்டத்தைத் தயாரிப்பதற்கான கருத்தரங்கு இம்மாதம் 23-ம் திகதி தேவரையாளி இந்துக்கல்லூரியில் நடைபெறவிருக்கிறது.

"நாட்டில் நடைபெறும் கலவரங்கள் காரணமாக தென்னிலங்கையில் தொழில் புரியும் பலர் பாதிக்கப்பட்டு, பல இடர்பாடுகளிடையே காலத்தைக் கழிக்க வேண்டியுள்ளது என்றும், இவர்களுக்கு நிவாரணமளிக்கும் வகையில், பல துறைகளிலும் கிராமத்தை முன்னேற்றும் நோக்கமாக ஒரு சமூக பொருளாதாரத் திட்டம் தயாரித்து செயல்படுத்த வேண்டியிருப்பதாகவும் திட்ட அமைப்பாளர் திரு. எம். சி. சினித்தம்பி விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார். (மா)

# சாம்பியன்

(புலோலி)

வடமாராட்சி விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்தப்பட்ட எல்லேப்போட்டியில் பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் சாம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## நெடுங்கேணி, கொக்கச்சான் குளத்தில்
# வெளி மாவட்டத்தினர் குடியேறத்தடை!
### வவுனியா மா. அ. சபை தீர்மானம்

[வவுனியா]

"நெடுங்கேணி தமிழ் உதவி அரசாங்க அதிபர் பிரிவின்கீழ் அடங்கும் கொக்கச்சான் குளத்தில் உள்ள காணிகள், நிலஅளவைசெய்யப்பட்டு, அப்பகுதியில் வசிக்கும் மக்களுக்கே பகிர்ந்தளிக்கப்படவேண்டும் மிஞ்சிய காணிகளை வவுனியா மாவட்டத்தினருக்கே வழங்கவேண்டும் இப்பகுதியில் வெளிமாவட்டத்தினர் குடியேற்றப்படுவது தடுக்கப்படவேண்டும்" எனக் கோரும் பிரேரணை வவுனியா மாவட்ட அபிவிருத்திசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வவுனியா மாவட்ட அபிவிருத்திசபை, இரண்டாம் முறையாக தலைவர் திரு. மு. சிற்றம்பலம் தலைமையில் கூடியபோது; மேற்படி பிரேரணையை வவுனியா எம். பி.யும் அபிவிருத்திசபை உறுப்பினருமான திரு. தா. சிவசிதம்பரம் சபையில் சமர்ப்பித்தார். இப்பிரேரணை மீது அவர் உரையாற்றுகையில் கூறியதாவது:

"கொக்கச்சான் குளத்தில் வெளிமாவட்டத்தினரை, குறிப்பாக சிங்களவர்களைக் கொண்டுவந்து திட்டமிட்டு குடியேற்றுவதற்கான ஏற்பாடுகள் நடைபெறுகின்றன. அண்மையில் இங்கு விஜயம் செய்திருந்த கைத்தொழில் விஞ்ஞானத்துறை அமைச்சர் திரு சிறில்மத்தியு, இப்பகுதியில் புகையிலை உற்பத்தி மேற்கொள்ளப்படவுள்ளது எனவும், வெளிமாவட்டத்திலிருந்து சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றுவது என்றும் தெரிவித்துள்ளார். இது தொடர்பான நடவடிக்கைகளை வவுனியா தெற்கு சிங்களப்பகுதி உதவி அரசாங்க அதிபர் பிரிவு மேற்கொண்டுள்ளது. வவுனியா வடக்கு தமிழ்உதவி அரசாங்கஅதிபர் பிரிவின்கீழ் உள்ள இப்பகுதியின் நிர்வாக அலுவல்களை மேற்கொள்ளவும் நிர்மாணம் தொடர்பாக காணிகளைப் பகிர்ந்தளித்து குடியேற்றங்களைச்செய்வதற்கும் வேறொரு உதவிஅரசாங்க அதிபர் பிரிவிற்கு அதிகாரம் வழங்குவது சட்டத்துக்கு முரணான காரியம். இதுதொடர்பாக வவுனியா வடக்கு தமிழ் உதவிஅரசாங்க அதிபர் பிரிவும் ஆட்சேபனை தெரிவித்துள்ளது. இத்தகைய எல்லைமீறும் விடயங்கள் பாராளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டதன் பின்னர் முடிவுசெய்தால் மட்டுமே அமுல்நடத்தப்படலாம்" என்றார்.

வவுனியா மாவட்டத்தில் 340 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்கள் இருப்பதாகவும், ஆசிரியர்கள் இங்கு உடனடியாக நியமிக்கவேண்டும் அல்லது பாடசாலைகளை தனியார் பொறுப்பில் இயங்கவிடவேண்டும் என்று அரசாங்கத்தையும் கல்வியமைச்சையும் கோரவேண்டும் என்று பிரேரணை ஒன்றையும் சபையில் திரு. தா. சிவசிதம்பரம் சமர்ப்பித்தார்.

கிராமிய கைத்தொழில் அமைச்சுடன் தொடர்பு கொண்டு வவுனியா மாவட்டத்தில் கால்நடை வளர்ப்பினை ஊக்குவிக்கவும், மேய்ச்சல் நிலங்களை உருவாக்கவும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென உறுப்பினர் திரு. தா. சிவசிதம்பரம் கூறியபோது; கூட்டுறவுச் சங்கங்களை அமைத்து அதன்மூலம் கால்நடைவளர்ப்பை ஊக்குவிக்கவேண்டும் என்று இணக்கம் தெரிவிக்கப்பட்டது.

மேய்ச்சல் நிலத்திற்கான காணிகளை பூவரசங்குளம் [illegible] இனம் காண்பது [illegible] அவற்றை மேய்ச்சல்நிலமாக உருவாக்கி, பராமரிக்கவேண்டும் என்று முடிவுசெய்யப்பட்டது.

**தீர்மானங்கள்**

[illegible] வி[illegible]மாவட்டத்தில் உள்ள அரச தச்சுத்தொழிற்சாலையைப் பொறுப்பேற்று நவீனமயப்படுத்துதல் ஓமந்தையிலுள்ள கல்லுடைக்கும் நிலையத்தைப்பொறுப்பேற்று நடத்துதல்; செங்கல், ஓடு தயாரித்தல் மரவேலை, இரும்புவேலை, சுண்ணாம்பு தயாரிக்கும் வேலை போன்றவைகளுக்கு தொழிற்சாலைகளும் இவை எல்லாவற்றுக்கும் பொதுவானதாக ஒரு நவீன இயந்திர வேலைத்தளம் முதலியவற்றை அமைத்தல்; இங்கிருந்து வெளிமாவட்டங்களுக்கு எடுத்துச்செல்லப்படும் சாணம், குழைகள், மரங்கள், பாவற்குளத்திலிருந்து சிமெந்து தொழிற்சாலைக்கு எடுத்துச் செல்லப்படும் கருங்கற்கள் போன்றவற்றுக்கு வரிகள் விதிப்பதன்மூலம் மாவட்ட சபையின் வருமானத்தைப் பெருக்குவது; வவுனியாவில் உற்பத்திசெய்யப்படும், நிலக்கடலை, உழுந்து விளைபொருட்களை பைகளில் அடைத்தல், உளுந்தைச் சுத்தப்படுத்தி மாவாக்கிப் பப்படம்செய்தல், பெருமளவில் இங்கு கிடைக்கும் வைக்கோலைப் பயன்படுத்தி கடதாசிசெய்தல் போன்ற சிறு கைத்தொழில்களைத் தொடங்கி அவற்றிற்கு வங்கிகளில் கடன்வசதி பெற்றுக்கொடுத்து இப்பகுதி இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பளித்தல் போன்ற பிரேரணைகளும் சபையில் சமர்ப்பிக்கப்பட்டு திருத்தங்களுடன் நிறைவேற்றப்பட்டன.

---

# நாகப்பட்டினம் அருகே 2 இலங்கையர் கைது!
### படகும், இயந்திர உபகரணங்களும் பிடிபட்டன

சென்னை, ஆக. 16

நாகபட்டினம் துறைமுகம் அருகே இரண்டு இலங்கையர், தென்னிந்திய சுங்கப்பகுதியினரால் நேற்று கைதுசெய்யப்பட்டனர்.

இவர்களிருவரும் படகு ஒன்றில் சென்று கொண்டிருந்த போதே கைது செய்யப்பட்டனர்.

படகும், படகிலிருந்த அறுபதினாயிரம் ரூபா பெறுமதியுள்ள இயந்திர உபகரணங்களும் கைப்பற்றப்பட்டுள்ளன.

---

# சென். திரேசாவுக்கு ரூபா 2 லட்சம் அடுத்தாண்டு கிடைக்கும்!
### கிளிநொச்சி எம். பி. தகவல்

[பரந்தன்]

கிளிநொச்சி சென். திரேசா மகளிர் கல்லூரி அபிவிருத்திக்கு இரண்டு லட்சம் ரூபா கிடைக்கவுள்ளது. அடுத்த ஆண்டு இந்நிதியை ஒதுக்கித் தருவதாகக் கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி தெரிவித்தார். இக்கல்லூரியின் க. பொ. த. [உயர்தர] வகுப்பு மாணவர் ஒன்றியத்தின் இரவு விருந்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இக்கல்லூரியின் இரவு விருந்து மற்றும் உயர் கல்லூரிகள் நடத்தும் விருந்திலும் குறைவுடாதிருப்பதாகக் கூறிய திரு. ஆனந்தசங்கரி தாம் இதனால் பெருமையடைவதாகக் கூறிக் கல்லூரி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரத்தின் ஊக்கத்தையும் கல்லூரி வளர்ச்சியில் கொண்டுள்ள அக்கறையையும் பாராட்டினார்.

யாழ். மாவட்டப் பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம்.எம். மன்சூர் பேசுகையில் மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் பிரவேசிக்கும்போது பண்புடையவர்களாக இருக்கவேண்டுமென்று தெரிவித்தார். இவ்விருந்து வைபவம் யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல கல்லூரிகளின் விருந்துகளுக்கு ஈடாக இருந்ததாகவும் இதனை ஒழுங்கு செய்த மாணவர் ஒன்றியத்தையும் கல்லூரி அதிபரையும் பாராட்டுவதாகவும் ஜனாப் மன்சூர் கூறினார்.

ஏ. வி. தம்பிராசா மற்றும் ஒன்றியத்தின் தலைவி கலேஸ்வரி மயில்வாகனம், செயலாளர் நந்தினி சுப்பிரமணியம், பொருளாளர் சரோஜினி சிவலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர்.

கல்லூரி அதிபர் செல்வி ராதா சோமசுந்தரம் தலைமையில் இவ்விருந்து வைபவம் நடைபெற்றது. [அ]

சங். ஜெயநேசன் சங்.

---

## அமெரிக்க நிறுவனம் பாராட்டு

[பச்சிலைப்பள்ளி]

அறவழிப் போராட்டக்குழு, இலங்கையில் சீதனத்திற்கு எதிராகப் பிரசாரம் செய்வதையும், "சீதனம் வாங்குவதை நிறுத்துங்கள்" என்ற தலைப்பில் துண்டுப்பிரசுரம் வெளியிட்டதையும், அமெரிக்காவிலுள்ள "புதிய சமுதாய அமைப்பு" என்ற நிறுவனம் பாராட்டியுள்ளது. துண்டுப் பிரசுரத்தின் 5 ஆயிரம் பிரதிகளை அந்த நிலையம் ஆங்கிலத்தில் அமெரிக்காவிலும் வெளியிட்டுள்ளது. (இ)

---

## சீன கருத்தடை வில்லைகள் இங்கு பாவனைக்குவரும்?

[கொழும்பு]

சீனாவில் உற்பத்தி செய்யப்பட்ட கருத்தடை வில்லைகளை இலங்கை மக்களின் பாவிப்புக்காகச் சந்தைப்படுத்துவது சம்பந்தமாக சுகாதார அமைச்சு ஆய்வு நடாத்தி வருகின்றது.

ஒவ்வொரு 20 நாளைக்கும் வில்லைகளை எடுப்பதற்குப் பதிலாக மாதாந்தம் பாவிக்கக்கூடிய மேற்படி வில்லைகள் சீனாவில் பரிசோதிக்கப்பட்டு அங்குள்ள பெண்கள் இவ்வில்லைகளை உபயோகித்து வருகின்றனர்.

சீன மருத்துவ ஆராய்ச்சி நிலையமொன்றினால் கண்டுபிடிக்கப்பட்ட இக்கருத்தடை வில்லைகளின் மாதிரிகளை அண்மையில் சீனாவுக்கு விஜயம் செய்த குடும்பசுகாதார அமைச்சர் டாக்டர் ரஞ்சித் அத்தபத்து இங்கு கொண்டுவந்து பேராசிரியர்கள் என். டி. டபிள்யு லயனலிடமும் டி. தனபாலாவிடமும் பரிசோதனைகளுக்காகக் கையளித்துள்ளார்.

---

## மாணவர்களுக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

தரகு பரீட்சைத்திணைக்களம் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இச் சான்றிதழ்கள், அடுத்த புதிய க. பொ. த. [சாதாரணம்] பரீட்சை இவ்வருடம் டிசம்பர் மாதம் நடைபெறுவதற்கு முன்னர் வழங்கப்படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் திரு குணபாலவிக்கிரமரத்தின தெரிவித்தார்.

தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் புதிய க. பொ. த. [உயர்தரம்] பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு பரீட்சைப் பெறுபேறுகள் வந்தவுடன் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளது

இதேநேரத்தில்; ஒருவரைத் தொழிலுக்குச் சேர்த்துக் கொள்வதற்கு முன்னர் அவரின் கல்விச் சான்றிதழ் தொடர்பாக பரீட்சைத் திணைக்களத்துடன் பரிசீலனை செய்துகொள்ளுமாறு பரீட்சை ஆணையாளர் சம்பந்தப்பட்ட திணைக்களங்களைக் கேட்டுள்ளார்.

பன்னிரண்டு வருடகால இடைவெளிக்குப் பின்னர் பரீட்சைத் திணைக்களம் க. பொ. த. [சாதாரணம் - உயர்தரம்] பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கு சான்றிதழ்களை வழங்க ஆரம்பித்துள்ளது. கடைசியாக 1969-ம் ஆண்டு க. பொ. த. [சாதாரணம்-உயர்தரம்] பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கே பரீட்சைத் திணைக்களத்தால் சான்றிதழ் வழங்கப்பட்டது. [வெ]

---

## இராணுவம்....

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

றில் சில தீக்கிரையாக்கப்பட்டன.

கம்பளையில் கடைகளைச் சேதப்படுத்திய காடையர்கள் மீது இராணுவம் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததில் ஒருவர் பலியானார்.

இதுதவிர புசல்லாவை, நாவலபிட்டி பலாங்கொடையிலும் பல கடைகள் தீக்கிரையாக்கப்பட்டன. [ம]

---

## தேவரையாளியில் தொ.நு.பயிற்சி

[புலோலி]

தேவரையாளி இந்துக்கல்லூரியில், பாடசாலையிலிருந்து வெளியேறிய இளைஞர் யுவதிகளுக்கான ஆறுதொழில் நுட்ப பயிற்சி நெறிகள் அடுத்த மாதம் 4ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

---


## மரண அறிவித்தல்
### தம்பிப்பிள்ளை இராசம்மா

வட்டுக்கோட்டை சங்கரத்தையைச் சேர்ந்த திருமதி தம்பிப்பிள்ளை இராசம்மா காலமானார். இவர் காலஞ்சென்ற தம்பிப்பிள்ளையின் மனைவியும், ஏரம்பமூர்த்தி [பென்சனர்], காசிப்பிள்ளை [இயந்திர உபகரணப் பகுதி], சுப்பிரமணியம் [ராணி சினிமா, காசாளர்] ஆகியோரின் அன்புத் தாயாருமாவார். அன்னாரின் ஈமைக்கிரியைகள் இன்று திங்கட்கிழமை [17-08-81] மாலை 4 மணிக்கு வழுக்கையாறு மயானத்தில் நடைபெறும். 0653

## மரண அறிவித்தல்
### அ. செல்வராசா

திருநெல்வேலி இராமலிங்கம் வீதியைச் சேர்ந்த பிரபல வர்த்தகர் செல்வராசா காலமானார். இவர் காலஞ்சென்ற அப்பாப்பிள்ளை, அம்மாப்பிள்ளையின் அன்பு மகனும், அன்னலட்சுமியின் அன்புக் கணவரும், முன்னாள் இலங்கை வங்கி சிறுப்பர் சுந்தரம்பிள்ளை, காங்கேசன்துறை சிமெந்துத் தொழிற்சாலை களஞ்சியப் பொறுப்பாளர் தம்பிஐயா ஆகியோரின் சகோதரனும், தனலிங்கம் [பொறியியலாளர் சீனிக்கூட்டுத்தாபனம் கந்தளாய்], மகாலிங்கம் [முன்னாள் இலங்கைப் போக்குவரத்து பரிசோதகர்], சிவலிங்கம் [கைத்தொழில் உற்பத்தி முகாமையாளர், யாழ். மாவட்ட புடவை நெசவாளர் சங்கம்], ரதிமணிதேவி, ரஞ்சனாதேவி ஆகியோரின் அன்புத் தந்தையும், கதிர்காமநாதன் [பொறியியலாளர் சவுதி அரேபியா], சர்வானந்தன் [உதவி புகையிரத அதிபர் பளை], தவமணிதேவி [ஆசிரியை நிலாவெளி], இரத்தினதேவி, இராசகுமாரியம்மா [நெசவு ஆசிரியை நீர்வேலி] ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமைக்கிரியை திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு செம்மணி மயானத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

திருநெல்வேலி கிழக்கு, இராமலிங்கம் வீதி. 0652

புதிய புத்தகம்! வெளிவந்துவிட்டது!

## யாழ்ப்பாணம் எரிந்தது ஏன்? எப்படி?

SPECIAL REPORT

'சாமிஜி'யின் கருத்துக்களுடன் கூடியது

ஒவ்வொரு தமிழனும் அவசியம் படிக்கவேண்டிய-பாதுகாத்து வைத்திருக்கவேண்டிய நூல்!

தனிப்பிரதி ரூபா 8-75

தபாலில் பெற விரும்புவோர் ரூபா 10/- மணிஓடர் அனுப்பவும்

வி. பி. பி. உடன் கவனிக்கப்படும்.

**மக்மில்லன் புத்தகசாலை**

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சிவன்பண்ணை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள 'ஈழநாடு' லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலா நிலைய அச்சகத்தில் 1981 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 17-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q B 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 389, 8126.